
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் ................................ 1
நெஞ்சமே அஞ்சாதே நீ!
சோம்பல்.............................................................2
சிலப்பதிகாரம்.....................................................3
மக்கள் சக்தி இயக்கம் .................................. 6
கவிதைகள். ........................................................ 7

சிந்தனை 7 செயல் 8 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். சூலை2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## அச்சுறுத்தும் சுற்றுச்சூழல்

தமிழ்நாடு பல துறைகளில் முன்னேறி விட்டது, நாம் வளர்ந்த மாநிலமாகி விட்டோம் என்றெல்லாம் பேசப்படுகிறது. இது உண்மையா என்பது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் மக்கள் நெருக்கமாக வாழும் மாநகரங்கள், நகரங்கள் மட்டுமல்ல, கிராமங்களிலும் சுற்றுச் சூழல் பாழடைந்து கிடப்பதைக் காணும்போது, அரசாங்கம் மட்டுமன்றி மக்களும் எவ்வளவு பொறுப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது விளங்கும். இனி சீர்திருத்தவே முடியாது என்று வேதனை கொள்ளும் அளவுக்கு நாம் ஒவ்வொருவரும் நம் பங்குக்கு சுற்றுச்சூழலை மாசுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.

சென்னையில் மட்டும் நாள் ஒன்றுக்கு 5400 மெட்ரிக் டன் கழிவுகளும், குப்பைக்கூளங்களும் உற்பத்தியாகின்றன என்று ஒரு புள்ளி விபரம் சொல்கிறது. ஒரு தனி நபர் சராசரியாக 400 கிராம் குப்பையை உற்பத்தி செய்கிறார்.

பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள்தான் அதிக அளவுக் கழிவுகளை, மக்காதக் குப்பைகளை உற்பத்தி செய்கின்றன. இந்த அளவுகோல்படி பார்த்தால், தமிழ்நாடு முன்னேறி யுள்ளது என்பது சரிதான். ஆனால் வளர்ந்த நாடுகள் எப்படி குப்பைகளைக் கையாளுகிறார்கள் நாம் - தமிழ்நாட்டில் எப்படி கையாளுகிறோம் என்று ஒப்பிட்டுப் பார்த்தால், நமக்கு சுற்றுச் சூழல் பற்றிய அக்கறையே இல்லாதது விளங்கும். திடக்கழிவு மேலாண்மையில் மற்ற மாநிலங்களை விடத், தமிழ்நாடு மிகவும் பின்தங்கியுள்ளது என்று சூழலியல் எழுத்தாளர் ஜியோ டாமின் கூறுகிறார்.


உலகெங்கும் திடக்கழிவு மேலாண்மை எவ்வாறு செயல்படுகிறது என்றால், மக்கும் கழிவுகளை மக்கச் செய்து உரமாக்குவது, மக்காதக் கழிவுகளை, மறுசுழற்சி செய்யத்தக்கவை, மறுசுழற்சி செய்ய இயலாதவை, தீங்கானவை என வகைப்படுத்தி அவற்றைத் தனித்தனியே கையாள்கிறது.

### என்ன செய்ய வேண்டும் ?

1.2016 ஆம் ஆண்டு மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மைச் சட்டம் இயற்றியது. அதில் திடக் கழிவு மேலாண்மை, நெகிழிக் கழிவு மேலாண்மை என இரு பிரிவுகள் உள்ளன. அதற்கான வழிகாட்டுதலும் உள்ளன. இதன்படி மருத்துவமனைக் கழிவுகள் பாதுகாப்பாக அகற்றப்படுகின் றன. அதற்கான கட்டணத்தை மருத்துவமனைகள் செலுத்துகின்றன. அதேபோல் அனைத்து நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளிலும் கழிவுகள் அகற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

2.குப்பைகள்உருவாக்கத்தைக் கட்டுப்படுத்துதல் .குப்பைகளை உருவாக்கி மலைபோல் குவித்து வைத்துவிட்டு, எப்படி அப்புறப்படுத்துவது என்று சிந்திப்பதைவிட, குப்பைகள் உருவாக்கத்தை தடுப்பதே அறிவுடைமையாகும். நெகிழி(பிளாஸ்டிக்) ஒரு அருமையான கண்டுபிடிப்பாகும். ஆனால் ஒரு வரைமுறை இல்லாமல், எதற்கெடுத்தாலும் நெகிழிப்பை, ஒருமுறை பயன் படுத்திவிட்டுத் தூக்கி எறியும் குவளை, தட்டு என்று நம் சமுதாயம் சீரழிந்து போனதால், உணர்வு மழுங்கிப் போனதால், வருங்காலத்தில் குப்பைமேட்டில்தான் நம் சந்ததிகள் வீடு கட்டி வாழப் போகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். துணிப்பை கையில் இருப்பது என்ன அநாகரிகமா ? இரண்டு விரல்களுக்கிடையில் தொங்கும் நெகிழிப்பைதான் நாகரிகமா? சொந்தமாகப் பைகளை கடைக்குக் கொண்டுச் செல்லும் பழக்கத்துக்கு மக்கள் மாற வேண்டும். இல்லையேல் அரசு மாற்ற வேண்டும் !

3.ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப்பை, பதாகை தட்டு, குவளை தயாரிக்கும் ஆலைகளை அரசு தடைசெய்ய வேண்டும். ..........அன்புடன் ஆசிரியர்




## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

மனித வாழ்வை ஆட்டிப் படைக்கும் இரு வேண்டாத நிலைகள் குற்ற உணர்வும், கவலையும் ஆகும் என மன இயல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். நேற்று நடந்து போன விடயங்களை எண்ணி, "நான் நேற்று அப்படிப் பேசியிருக்கக் கூடாது, இப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது" என்று எண்ணிக் குமைதலை "குற்ற உணர்வு" என்று குறிப்பிடுகிறார்கள். அதேபோல் "கவலை" என்பது நாளை நடக்கும் காரியம் என்னவாகுமோ என்று எண்ணிப் பயந்து வாழ்வதாகும்.

குற்ற உணர்வு, கடந்த கால நினைவுகளால் ஏற்படுவது என்றால், கவலை என்பது இனி நடக்கப் போவதால் ஏற்படுவது. ஆக, நேற்றும் தவறு செய்துவிட்ட வருத்தம். நாளையும் என்ன நேரிடுமோ என்ற பயம். இதனால் மனிதன் நிகழ்காலத்தை - வாழ்வின் பொன்னான பகுதியைக் கோட்டை விடுகிறான். மனம் வருந்துவதன் மூலமோ, அழுது புலம்புவதன் மூலமோ நடந்தவற்றை மாற்றிவிட முடியுமென்றால், உலகம் வேறு விதமாயிருக்கும். நேற்று நடந்த நிகழ்வுகள், கடந்து போன வரலாறு. அதை யாரும் மாற்ற முடியாது. இந்த உண்மை நிலையை நன்கு உணர்ந்து மனத்தில் கொள்ளும்போது, அனுபவபூர்வமாக, சூழ்நிலைக்கேற்ப நம்மால் நடக்க முடிகிறது. திருத்த முடியாத, மாற்ற முடியாத காரியங்களுக் காகப் புலம்புவது புத்திசாலித்தனமல்ல, பேதைமை



குற்ற உணர்வுகளும், கவலைகளும் நமது நேரத்தை வீண்டிக்கின்றன. நமது ஆற்றலை வடித்து விடுகின்றன. நமது எண்ணங்கள் தனது சுதந்திரத் தன்மையை இழந்து இதனால் முடக்கப்படுகின்றன.

..............நன்றி கங்கை புத்தக நிலையம்

## சோம்பல்.....

முனைவர்.லெ.பாஸ்கர்

மனித வாழ்வில் இடம்பெறக் கூடாதவைகளில் சோம்பல் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நம் வாழ்வில் சோம்பல் இருந்தால் புலம்பல் தான் மிஞ்சும். எந்தவொரு வேலையாக இருந்தாலும் உடனே சுறுசுறுப்புடனும், பொறுப்புணர்வுடனும் செய்தால் வெற்றி கிட்டும். செய்ய வேண்டிய கடமைகளை ஒத்திப்போட்டுக் கொண்டே சென்றால் அதனால் விளையக் கூடிய நன்மைகள் கிடைக்காமல் போய்விடும். அதுமட்டுமல்ல நம்மீது பிறர் வைத்திருக்கும் மதிப்பும் குறைந்து விடும்.

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு சோம்பேறிகளைக் கண்டால் அறவே பிடிக்காது. ஒருநாள் அரண்மனைச் சுவரில் ஒரு பிச்சைக்காரன் தன் முதுகை உரசிக் கொண்டிருப்பதைக் கண்ட அரசன், அவனை வரவழைத்து "இங்கு என்ன செய்து கொண்டிருக் கிறாய் ?" என்று கேட்க, அவனோ, "அரசே! நான் வேலை எதுவும் கிடைக்காமல் மிகவும் சிரமப் படுகிறேன். என் மனச் சோர்வைப் போக்க முதுகைச் சுவரில் உரசிவிட்டேன். என்னைப் பொறுத் தருளுங்கள்!" என்றான்..அவன் நிலையைக் கண்டு இரங்கிய அரசன் அவனுக்கு 50 பொற்காசுகள் மற்றும் புத்தாடைகள் கொடுத்து, இதை வைத்துப் பிழைத்துக் கொள்! என்று அனுப்பி வைத்தான். இதைக் கேள்விப்பட்ட இரண்டு சோம்பேறிகள் அடுத்த நாள் அரண்மனைச் சுவரில் முதுகை உரசிக் கொண்டு நிற்க, அவர்களை அழைத்த அரசன் அவர்கள் இருவருக்கும் தலா 5 சவுக்கடி கொடுக்க ஆணையிட்டான். அதிர்ந்த அவர்கள் இருவரும், "அரசே! நேற்று ஒருவனுக்கு பொற்காசு கொடுத்தீர்கள். எங்களுக்கு சவுக்கடியா?" என்று பயத்துடன் கேட்க, "நீங்கள் சோம்பேறிகள். இருவர் இருக்கும் போது ஒருவர் முதுகை மற்றவர் சொறிந்து கொள்ள வேண்டும்." என்றான்.



சோம்பலைத் தவிர்ப்போம்! புத்துணர்வு கொள்வோம்!

# சிலப்பதிகாரம் காவியம்

**மதுரைக் காண்டம். வாழ்வில் மீண்டும் மலர்ச்சியைக் காண மதுரை மாநகருக்குச் சென்ற கோவலன் கண்ணகி இருவரின் முடிவும், மதுரையின் அழிவும்.**
**மரு.த.இராசலிங்கம்.**

.சென்ற இதழ் தொடர்ச்சி.....

### 278.அரண்மனை நீங்கினாள் கண்ணகி

வெஞ்சினத்தால் வெம்பிய வள்தான்
விருட்டெனவே அரண்மனை நீங்கி,
பஞ்சின்மேல் தீப்பொறி ஒன்று
பற்றினாற்போல் பொறியென விரைந்து
துஞ்சாது மக்களும் ஒன்றாய்
துயருற்று நிற்பது மான
அஞ்சுவகை புலனது தோற்கும்
அல்லங்கா(டி) தெருவது சென்றாள்.

### 279.கண்ணகி கோலம் கண்டனர் மக்கள்

கண்ணகியின் வடிவமே கண்டார்
கையறுநிலை கலக்கமே கொண்டார்
பண்ணறுந்த பாடலாய் கண்டார்
பழிசுமந்த மதுரையென கொண்டார்
மண்ணிழந்த வேரெனக் கண்டார்
மனமதிலே மயக்கமே கொண்டார்
எண்ணிழந்த கணிதமாய் கண்டார்
ஏதிலியாய் ஏக்கமே கொண்டார்.

எழுத்திழந்த ஏடெனக் கண்டார்
எழுதிடாத கையது கொண்டார்
விழுதறுந்த ஆலெனக் கண்டார்
வீழ்வதுதம் தலையெனக் கொண்டார்
கொழுவில்லா கொடியெனக் கண்டார்
கொதிக்கின்ற மெய்யது கொண்டார்
பழுதில்லா பாவையும் கண்டார்
பத்தினிதான் இவளெனக் கொண்டார்.

### 280. கண்ணகி சூளுரை

பொல்லாத காலம்தான் மதுரைக் கென்று
புரிந்துகொண்ட மக்களுமே பதற்ற மாகி
கல்லாக சமைந்தங்கு நிற்றல் கண்டு
கண்ணகிதன் கடுவினையும் சாற்றி நின்றாள்.

“எல்லையில்லா வடுவினைதான் மன்னன் செய்தான்
ஏய்த்திங்கு பிழைப்போரும் இருப்ப தாலே!
வெல்லுகின்ற என்கற்பின் திண்மை யாலே
வெகுண்டேன்யான் கூடல்மா நகரின் மேலே!
கொல்லுகின்ற கொடுமைத்தீ சூழ்வ தாலே
குற்றமில்லை மாநகரும் அழிவ தாலே!
நல்லோர்கள் நாடெங்கும் நலமே காப்பர்.”
நாயகிதான் வருவினையும் சாற்றி நின்றாள்.

### 281.மக்கள் கவலை கொள்ளல்

நீர்மல்கும் கண்ணினர் ஆகி
நெஞ்சம்தான் குழைந்து நைந்து
ஊர்மல்கும் மக்களின் கூட்டம்
உணர்வற்று ஓரிடம் தேடி
கார்மல்கும் நீர்த்துளி போலே
கணக்கின்றி ஒன்றெனக் கூடி
யார்தருவார் அடைக்கலம் என்று
கவலையுடன் கரந்துறை போக....

### 282.கண்ணகி மதுரையை வலம் வருதல்

புலன்ஐந்தும் அடங்கிய வள்தான்
பூமேனி ஒடுங்கிய வள்தான்
கலன்உடைக்கும் காற்றுஅ வள்தான்
கார்இருளில் நடந்தவள் தாள்தான்
பலதிறத்து மக்களும் வாழும்
பட்டணத்து தெருவது கடந்து
வலம்வந்தாள் மதுரையை தான்தான்
வஞ்சினத்தை முடிக்கமும் முறைதான்.

### 283.இடப்பக்க கொங்கை எறிந்தாள்

“விலங்குகளும் பறவைகளும் ; வீடு காக்கும்
விழுச்செல்வம் போன்றோர்கள் மங்கையர்கள்
இலங்குகின்ற அறம்காக்கும் ஆன்றோர்
சான்றோர்
இரங்கும்நல் குணம்படைத்த இளைய வர்கள்
துலங்குகின்ற தூயவுள்ளம் முதியோர்
மூத்தோர்
தூள்ளுகின்ற பருவத்து மழலை யர்கள்
நலங்கெடாத வண்ணம்பிழைத் திடுக!” என்று
நல்லோர்கள் அழியாது காத்த தோடு,

முடியுடைவேந் தனுக்கருகில் முன்னிருந்தும்
முறைசெய்யா அமைச்சரோடு அரச மாந்தர்
குடிகெடுக்கும் கொடுஞ்செயலே குணமேயாகி
குன்றுவன செய்கின்ற இழிந்த மாக்கள்
அடியோடு மடிகமடி கவென்று நகைத்து
அழியட்டும் மதுரையென ஓங்கா ரத்தில்
துடிக்கின்ற இடப்பக்க கொங்கை திருகி
தூக்கியெறிந்தாள்வலக்கையால் நகரின்மேலே

### 284. எரிந்தது மதுரை

கற்புடைத் தெய்வம் கண்ணகியின்
சொற்படி நடத்தல் கடமையென்று
பொற்புடை தீத்தெய் வம்தோன்றி
செயற்பட, பெருந்தீ மண்டிற்று
மண்டிய தீயும் பரவலாக
வேண்டிய இனங்கள் நீங்கலாக
பாண்டிய தலைநகர் எங்குமாக
தீண்டியே எரிந்தது தீரமாக!

மாடங்கள் மாணிக்க மாமன் றங்கள்
மாசுடையோர் வாழுகின்ற வாழி டங்கள்
பூடங்கள் பொய்யர்தம் உறைவி டங்கள்
பொரிந்தனவே எரிந்தனவே எரிவாய் உள்ளே!
கூடங்கள் கொலுவிருக்கும் மண்ட பங்கள்
குற்றவாளி கொல்லனவன் கொடுமி டங்கள்
வேடங்கள் போட்டுநிதம் ஏய்ப்போரி டங்கள்
வெடித்தனவே வெந்தனவே எரிவாய் உள்ளே!
கறவைகளும் கன்றுகளும் கதறி யங்கே
கரவில்லா ஆயர்பாடி அணைந்து கொள்ள
புறமுதுகு போர்க்களத்தில் காட்டா களிறும்
போய்பிழைக்க பிடியோடு புறமே போக,
துறவிகளும் அறவோரும் அச்ச மின்றி
துன்பமின்றி தன்கருமம் ஆற்றி நிற்க,
உறவான மதுரையின் காவல் தெய்வம்
உலவிடாது கோவிலுக்குள் முடங்கி கொள்ள

### 285.கதிரவன் நாணினான்

வைகறையில் பற்றிய தீயும்
அதிகாலைப் பொழுது வரையில்
வைகைக்கரை வழங்கிய நகரை
அதிகாரம் செய்து தீய்க்க....
எரிந்துகரிந்து கிடக்கும் மூதூர்
எழுகதிரும் பார்க்க நாணி,
திரிகின்ற மேகம் தன்னில்
திணித்துக்கொண் டான்தன் மேனி.

### 286.சினம் தணிந்தாள் கண்ணகி

மதுராபதி தெய்வமும் தோன்றி
மனதுக்கு ஆறுதல் கூற,
வெதுவெதுப்பாய் கண்ணகி நெஞ்சம்
வெஞ்சினமும் வெம்பியே ஆற,
அதுவரையில் நடந்தவை யெல்லாம்
அழியாத வடுவென மாற,
பதுமையென நடந்தவள் அங்கே
பழங்கொற்றவை கோவிலும் கண்டாள்.

கொற்றவையின் கோவிலுள் சென்றாள்
கும்பிட்டாள்; கைவளையல் உடைத்தாள்
மனக்கண்ணில் கோவலன் கண்டாள்
மனமெங்கும் புன்னகை பூத்தாள்!
நடந்தவையும் மறந்திட, கண்ணகி
நடந்தாளே மேற்திசை நோக்கி!
............மதுரைக்காண்டம் முற்றும்

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- குறிஞ்சிக்கலி

கபிலர் பெருமான் இயற்றியது குறிஞ்சிக் கலியாகும். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாகும். இங்கே வானுயர் பசும் மரங்களும், மணம் பரப்பும் அழகிய மலர்களும், தேன் போன்ற சுனைகளும், துள்ளித் திரியும் மான்களும், வலிமையான யானைகளும், பிற விலங்குகளும் இயற்கையின் உயிரோவியங்களாகக் காணப்படும். இங்குதான் கன்னியொருத் தியும், காளையொருவனும் காதலுற்றுக் கலந்துவிடும் உறவு உதயமாகிறது. அந்தக் காதல் கலப்பினை உவமையழகுடன் நம் உள்ளம் மகிழ்வுறும் வண்ணம் 29 செய்யுள்களில் தீட்டிக் காட்டுகிறார் கபிலர்.

தலைவனும், தலைவியும் களவிலே கூடி மகிழ்கின்றனர். அவர்களின் காதற்களவு நீடித்துக் கொண்டே செல்கிறது. அது நல்லதல்ல. விரைவில் திருமணம் நடைபெற வேண்டும் என்று தலைவியின் தோழி நினைக்கின்றாள். தலைவனிடம் அதுபற்றிப் பேசுகின்றாள்.

தலைவன் மலைநாட்டைச் சேர்ந்தவன். அங்கு மதயானைகள் அதிகம். மதயானைகள் அதிகம் உள்ள மலைநாடன் என்று கபிலர் சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படிக் கூறாமல் எப்படி உவமையழகுடன் காட்சிப்படுத்துகிறார் கபிலர் பாருங்கள்!

வேங்கை மரமானது பூத்துக் குலுங்க, அது புலியின் உருவம் போல் இருக்கக் கண்ட மத யானைக்குச் சினம் மிகுந்துவிட, தன் கொம்புகளை ஆழமாக மரத்தடியில் பதித்ததாம். அப்படிப்பட்ட மதயானைகள் நிறைந்துள்ள மலைநாடனே! என்று இவ்வாறு பாடுகிறார்.

**உறு புலி உரு ஏய்ப்பப் பூத்த வேங்கையைக்**
**கறுவு கொண்டு அதன் முதல் குத்திய மத யானை**

மேலும் தோழி, தலைவனிடம் தலைவியின் நிலையை நயம்பட எடுத்துரைக்கிறாள். எவ்வாறு அழகுறக் கூறுகிறாள் ?. விளைநிலத்தில் நீர் இல்லையென்றால், பயிர்கள் வாடிவிடும். அதுபோல் திருமணம் விரைவில் நடைபெறவில்லையென்றால் அவள் வாடிவிடுவாள். மழை பெய்த விளைநிலம் விடியலில் பசுமையாகக் காட்சியளிப்பது போல், திருமணம் நடந்தேறும் பொழுது அவள் அழகு பெறுவாள் என்பதை,

**நீர் அற்ற புலமே போல் புல்லென்றாள், வைகறை,**
**கார் பெற்ற புலமே போல், கவின் பெறும்; அக் கவின்....** என்று பாடுகிறார் கபிலர்.

அதுமட்டுமல்ல அறச்செயல் செய்யாதவனின் முதுமைக்காலம் போல் கவலை கொண்டிருந் தவள், ஆற்றலுடையவனின் செல்வம் போல் திருத்தமாக விளங்குவாள் என்பதை,

**அறம் சாரான் மூப்பே போல் அழிதக்காள், வைகறை**
**திறம் சேர்ந்தான் ஆக்கம் போல் திருத்தகும்** ....என்று உவமையழகுடன் நம்மை மகிழ்வுறச் செய்கிறார் கபிலர் பெருமான்.

..........உவமையழகு தொடரும்






பெரம்பலூர் மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக மாவட்டச் செயலாளர். சிவக்குமார், மாவட்ட ஆலோசகர் செ.வைரமணி, மேற்கு ஒன்றியச் செயலாளர் து.வாஞ்சிநாதன் ஆகியோர் பெரம்பலூர் மாவட்ட மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர். டாக்டர்.மாரிமுத்து, மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் முனைவர்.திருமதி.பெ.மரகதவள்ளி அவர்களைச் சந்தித்து மக்கள் நலன் சார்ந்த கோரிக்கை மனு அளித்தனர். நாள். 11.07.2025

## *மக்கள் சக்தி இயக்கம் – மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு பரப்புரை*

- வளமான வாழ்வுக்கும், உயர்வுக்கும் முழுமையான மதுவிலக்கை, போதைப்பொருள் ஒழிப்பை ஆதரிப்பீர்!
- நல்ல மதுவோ, கள்ள மதுவோ இரண்டுமே உடலுக்கும், உலகத்துக்கும் கேடுதான்.
- நல்ல மது என்று அருந்தினால் அது மெல்ல, மெல்லக் கொல்லும். கள்ள மதுவோ உடனே கொல்லும்.
- இயற்கைக்கு முரணானது போதை!
- இல்லறத்துக்கு எதிரானது போதை!
- பழி, பாவங்களைச் செய்யத் தூண்டும் மது! நண்பனையும் பகைக்கும் அது!
- உடலையும் கெடுத்து, உயிரையும் பறித்து, குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கும் மதுவை நாடலாமா ?
- சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும் மது மற்றும் போதைப் பழக்கத்திலிருந்து விடுபடுவதோடு, வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்ற, மதுவாசனை இந்த மண்ணின் வாசனையாகாமல் தடுக்க,

**பூரண மதுவிலக்கு, போதை ஒழிப்பு பரப்புரையை இன்றே தொடங்குவோம்!**

| | | |
|---|---|---|
| மரு.த.இராசலிங்கம் | முனைவர்.லெ.பாஸ்கர் | கே.சி.நீலமேகம் |
| மாநிலத்தலைவர் | மாநிலப் பொதுச்செயலாளர் | மாநிலப் பொருளாளர் |
| தூத்துக்குடி | தஞ்சை | திருச்சி |

## தீர்ப்புகளில்……

இரவை
இருட்டென நிலவும்

பகலை
பளிச்சென சூரியனும்

சொல்கின்றன
வெல்கின்றன

நன்மக்கள்
நீதிநெஞ்சம்

நம்பாத
நாட்டாமை

வாய்மையின்
பதறல்கள்

ஊமையின்
கதறல்கள்

சூடான
கண்ணீர்

சாட்சியின்றி
குனிந்தது தலை

நிரபராதிக்கு
நீதியில்லை

தீர்ப்புகளில்
தூக்குத் தண்டனை

வானமும்
பூமியும் மௌனத்தில்!

கவிஞர். கலியுகன் கோபி. சென்னை

## போதையின் பயணம்….

சீரான வாழ்வை
சீரழிக்க வந்ததே,
நேரான பாதையை
நிலைகுலைக்க வந்ததே
மாறாத மனத்தையும்
மயக்கிடும் போதையே
ஊரோடு உறவையும்
ஒதுக்கிடச் செய்யுதே!

முளைத்த பயிரை
முன்னேறச் செய்திட
விளையும் பயிரின்
விளைச்சல் பெருக்கிட
ஆசையாய் வளர்த்த
அன்புப் பெற்றோரை
மோசமாய் ஏமாற்றி
மூழ்கினாய் மூர்க்கனாய்!

தன்னை மறந்தாய்
தன்னிலை துறந்தாய்
பண்பை இழந்தாய்
பாழ்பட்டு போனாய்
என்பும் உடலும்
எந்நிலை யாயினும்
இன்பமென சாக்கடை
இறுகியே கிடக்கிறாய்!

நானிலத்தில் கொண்ட
நண்பரை இழந்து
மானினத்தில் உதித்து
மாலையிட்ட மங்கையும்
கொஞ்சுமொழி பேசும்
பிஞ்சையும் கருக்கி
நஞ்சை உறிந்திட
பஞ்செனப் பறக்கிறாய்!

ஆற்றிய பணியும்
ஆழ்கடல் புதைத்தே
சேற்றில் மூழ்கும்
சிற்றுயிராய் மாறியே
போற்றிய உறவும்
புண்ணிய நெஞ்சமும்
தூற்றியே ஒதுக்கி
துரத்தும் விலங்கானாய்!

கவிஞர்.ஆசிரியர். க.தேவிகா
தூத்துக்குடி